# சிறுவர் சங்க கீதம்

**எங்கள் சங்கம் வாழ்கவே**

பௌளி : எங்கள் சங்கம் வாழ்கவே
சிறுவர் சங்கம் வாழ்கவே
தங்கி நிற்கும் புகழுடன்
என்றும் ஓங்கி வாழ்கவே!
குன்று போல் நிலைக்கவே
- எங்கள்

ஹிந்தோளம் : ஓங்கு தமிழ் நாட்டிலே
ஒப்பிலாத மக்களாய்
வீங்கு தோளராகி நாம்
வெற்றி எந்த துறையிலும்
பெருமை பெற்று நிறையவும்
- எங்கள்

ஹம்ஸா நந்தி : இந்தியா லெங்கணும்
இணையிலாத மணிகளாய்
இன்ப மாகச் சிறுவர்கள்
வாழ்வில் கலைகள் கற்கவும்
தாழ்விலாது நிற்கவும்
- எங்கள்

பாகேஸ்ரீ : பாரில் யாரும் நேரிலா
பாரதத்தின் வீரர்நாம்
யாரும் போற்ற எங்களால்
உண்மை கொள்ள இயலுமே
எண்ணம் சொற்கள் செயலிலே
- எங்கள்

மாண்டு : அன்பு என்னும் நெறியிலே
சென்ற காந்தி சொல்லிலே
என்று மொன்றாய் நின்றுவோர்
அழிவிலாத நல்ல நம்
வழியை யார்க்கும் சொல்லுவோம்
- எங்கள்

-இயற்றியவர்: அ.நா. இராதாகிருஷ்ணன் (1950)
பாட்டு அமைப்பு: அகிலா ராமஜயம்